


# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# கால்நடை பராமரிப்பு

## மானியக் கோரிக்கை எண் : 6

அறிவிப்புகள்

2022 – 2023

# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

## கால்நடை பராமரிப்பு

மானியக் கோரிக்கை எண் : 6

## அறிவிப்புகள்
## 2022 - 2023


**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**

மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

## கால்நடை பராமரிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 16 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**

மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

1. தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகளின் இருப்பிடத்தில் கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக 245 நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்கள் எண்பத்தி ஐந்து கோடியே ஐம்பத்தி மூன்று இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே சென்று கால்நடைகளுக்கு மருத்துவ சேவையை வழங்கும் பொருட்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 85.53 கோடி நிதி ஒதுக்கீட்டில் 245 நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்கள் வழங்கப்படும்.

## 2. 37 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் இருபத்தி ஐந்து கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

நோயுற்ற கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கும் மையங்களாகவும், அறிவுசார் மையங்களாகவும், விரிவாக்க மையங்களாகவும் விளங்கும் கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 25.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 37 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.



## 3. வள்ளலார் அவர்களின் 200வது பிறந்த நாளை முன்னிட்டு ஆதரவில்லாத, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்பு பிராணிகள் மற்றும் பல்வேறு விலங்குகளை பராமரிக்கும் அரசுசாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்கு "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" இருபது கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும்.

வள்ளலார் அவர்களின் 200வது பிறந்தநாளை முன்னிட்டு ஆதரவில்லாத, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்பு பிராணிகள் மற்றும் பல்வேறு விலங்குகளை பராமரிக்கும் அரசுசாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்காக **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 20.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" என்னும் புதிய திட்டம் துவங்கப்படும்.

**4. செட்டிநாடு, கால்நடைப் பண்ணையில் நாட்டுக்கோழி இனப்பெருக்கப் பண்ணை, கோழிக்குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ஆகியவை பதினான்கு கோடியே எழுபத்தி மூன்று இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.**

பெருகி வரும் நாட்டுக்கோழி இறைச்சி மற்றும் முட்டையின் தேவையை கருத்தில் கொண்டு, அறிவியல் மற்றும் நவீனமயமாக்கல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நாட்டுக்கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக, **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூபாய் 14.73 கோடி நிதி ஒதுக்கீட்டில் சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் நாட்டுக்கோழி இனப்பெருக்கப் பண்ணை, கோழிக்குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ஆகியவை நிறுவப்படும்.



**5. தொலைதூர கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் (7,760) ஏழு கோடியே எழுபத்தி ஆறு இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.**

தொலைதூர கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளின் நலன்களை பேணுவதற்காகவும் தரமான சிகிச்சை வழங்குவதற்காகவும், **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூபாய் 7.76 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7,760 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும். இம்முகாம்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை, குடற்புழு நீக்கம், தடுப்பூசி, ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சிறிய மற்றும் பெரிய அறுவை சிகிச்சைகள், மகப்பேறியல் சிகிச்சைகள், அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை வழங்கப்படும்.

**6. உலகவங்கி உதவியுடன் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் 15 மாவட்டங்களில் 9 உப வடிநிலப் பகுதிகளில் கால்நடை பராமரிப்புப் பணிகள் நான்கு கோடியே எண்பத்து நான்கு இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் நான்காம் கட்டமாக 15 மாவட்டங்களை உள்ளடக்கிய மேலும் 9 உப வடிநிலப் பகுதிகளில் **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 4.84 கோடி நிதி ஒதுக்கீட்டில் பால்வள ஆர்வலர் குழுக்கள் அமைத்தல், கன்று மேலாண்மை, மடிவீக்க நோய் மேலாண்மை, மலடுநீக்க சிகிச்சை, தீவன அபிவிருத்தி மற்றும் செயற்கைமுறை கருவூட்டல் போன்ற கால்நடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.



**7. உதகை மாவட்ட கால்நடை பண்ணையில் நோய் இல்லாத உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்ய காளைகளுக்கான தனிமைப்படுத்துதல் (Quarantine) நிலையம் இரண்டு கோடியே இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.**

உறைவிந்துக்குச்சி உற்பத்தி நிலையங்களில் நோயில்லாத தரமான உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்வதற்காக, ஒன்றிய அரசு வகுத்துள்ள வழிகாட்டுதல்களின்படி, புதிதாக கொள்முதல் செய்யும் கால்நடைகள், பண்ணையில் சேர்க்கப்படும்முன் நோய் தொற்று உள்ளதா எனக் கண்டறிய கால்நடைகளுக்கு தனிமைப்படுத்துதல் வசதி இருக்க வேண்டும். இதன் பொருட்டு உதகை, மாவட்ட கால்நடைப் பண்ணையைச் சேர்ந்த தனிமைப்படுத்தும் நிலையம் **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 2.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் வலுப்படுத்தப்படும்.

**8. நாட்டுக் கோழிகளை வளர்ப்பதில் திறன் கொண்ட கிராமப்புற பயனாளிகளுக்கு சிறிய அளவிலான (250 கோழிகள் / அலகு) 100 நாட்டுக் கோழி பண்ணை அலகுகள் 50% மானியத்தில் ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

நாட்டுக்கோழி வளர்ப்பதில் திறமையும் ஆர்வமும் உள்ள 100 தொழில் முனைவோரைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிப்பதற்காக, **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூபாய் 1.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் நாட்டுக் கோழி பண்ணைகளை நிறுவுவதற்குத் தேவையான உள்ளீடுகள் (250 நான்குவார வயதுடைய கோழிக் குஞ்சுகள், தீவனம், உபகரணங்கள், குஞ்சு பொறிப்பகம்) 50% மானிய விலையில் வழங்கப்படும். இந்த விவசாயிகள் நாட்டுக் கோழிக் குஞ்சுகளை வளர்த்து விற்பனை செய்வதன்மூலம் வருமானம் ஈட்டலாம்.



**9. கால்நடை பராமரிப்புத் துறையின் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் (உதகை, ஈச்சங்கோட்டை மற்றும் ஓசூர்) தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு RTPCR இயந்திரங்கள் எழுபத்தைந்து இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

உறைவிந்து உற்பத்தி நிலையத்திற்காக ஒன்றிய அரசினால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, நோய் இல்லாத உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக, உதகமண்டலம், ஈச்சங்கோட்டை மற்றும் ஓசூரில் உள்ள உறைவிந்து உற்பத்தி நிலையங்களை வலுப்படுத்தும்பொருட்டு **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூபாய் 75.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், RTPCR இயந்திரங்கள் வழங்கப்படும்.

**10. 2000 ஏக்கரில் கால்நடை தீவனபயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் ஏக்கருக்கு ரூ.3,000 மானியமாக வழங்கும் திட்டம் அறுபது இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்து வருவதன் மூலம் எழுந்துள்ள தீவனப் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக, உணவுப் பயிர் சாகுபடி செய்யும் 2000 ஏக்கர் நிலங்களில் தீவனப் பயிர்களை ஊடுபயிராகவோ அல்லது வரப்புப் பயிராகவோ சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 60.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், ஒரு ஏக்கருக்கு 3000 ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியம் வழங்கப்படும்.



**11. பசுந்தீவன உற்பத்தியை பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு 25% மானிய விலையில் பண்ணைக் கருவிகளை வழங்கி விவசாயிகளை தொழில் முனைவோராக உருவாக்கும் திட்டம் நாற்பத்திரண்டு இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

வணிக ரீதியிலான பசுந்தீவன சாகுபடியை மேற்கொண்டு பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி, அவர்களைத் தொழில் முனைவோராக உருவாக்க, **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 42.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், வணிக ரீதியில் ஊறுகாய் புல் உற்பத்தி செய்யும் நான்கு அலகுகளை நிறுவுவதற்கான பண்ணைக் கருவிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

**12. கரூர் மாவட்டத்தில் புழக்கடை கோழியின ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம் இரண்டு கோடியே பன்னிரண்டு இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.**

தமிழ்நாட்டின் விவசாயிகள் புழக்கடை கோழி வளர்ப்பின் மூலம் குறைந்த செலவில் கணிசமான அளவு இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி செய்து பயனுறும் இலக்குடன், முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் கரூர் மாவட்டத்தில் "புழக்கடை கோழியின ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம்" ரூபாய் 2.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டு பயனாளிகளுக்கு மேலாண்மைப் பயிற்சியுடன் இடுபொருட்களும் வழங்கப்படும்.



**13. தமிழ்நாட்டில் உள்ள நாட்டின நாய்களுக்கான (இராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை மற்றும் கோம்பை) இனப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் ஒரு கோடி ரூபாய் செலவில் தென்காசி மாவட்டத்தில் நிறுவப்படும்.**

தமிழகத்தின் இராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை மற்றும் கோம்பை ஆகிய நாட்டின நாய்களை அழிவிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன், முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தால் தென்காசி மாவட்டத்தில் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்தின் "நாட்டின நாய்களுக்கான இனப்பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்" நிறுவப்பட்டு, இவ்வின நாய்க்குட்டிகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

**14. கிராமப்புற முன்னேற்றத்திற்கான வெண்பன்றி இனப்பெருக்கம் மற்றும் உள்ளீட்டு மையம் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்படும்.**

வெண்பன்றி வளர்ப்பில் நவீன மேலாண்மை வழிமுறைகள், தேவைகளைக் கருத்தில்கொண்டு, முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தால் செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 99.48 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் "கிராமப்புற முன்னேற்றத் திற்கான வெண்பன்றி இனப்பெருக்கம் மற்றும் உள்ளீட்டு மையம்" நிறுவப்படும்.



**15. நாட்டுக்குட்டை மாடுகளுக்கான பாதுகாப்பு மையம் எண்பத்தியாறு இலட்சத்து இருபத்தி ஆறாயிரம் ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்படும்.**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் குறைந்து காணப்படும் நாட்டுக்குட்டை மாட்டினத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் முனைப்புடன், முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தால் செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 86.26 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் "நாட்டுக்குட்டை மாடுகளுக்கான பாதுகாப்பு மையம்" நிறுவப்படும்.

**16. உம்பளாச்சேரி மாடுகளின் இனத்தைப் பல்துறை அணுகுமுறையின் மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில் பாதுகாத்தல் எனும் திட்டம் எழுபத்தி எட்டு இலட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாய் செலவில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்படும்.**

உம்பளாச்சேரி இன மாடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கவும் அவற்றின் பால் உற்பத்தித் திறனை உயர்த்தவும், முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் " உம்பளாச்சேரி மாட்டினத்தை பல்துறை அணுகுமுறையின் மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில் பாதுகாத்தல்" எனும் திட்டம் ரூபாய் 78.68 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.